*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 4(1) 2021*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received: 15th November 2020/Accepted: 23th November 2021*

# முஸ்லிம் குடும்பங்களில் வீட்டு வன்முறைகள்: கொழும்புப் பிரதேச நேர்வு நிலை பற்றிய கள ஆய்வு

# Domestic Violence in Muslim Families: A Case Study in Colombo District

**L.F. Hilma[1], and M.I.M. Jazeel[2]**
**[1&2] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language**
**South Eastern University of Sri Lanka**
**hilmun95@gmail.com[1], jazeelmi@seu.ac.lk[2]**

**ஆய்வு சுருக்கம்:**

*வீட்டு வன்முறையின் சமூகத் தாக்கங்கள் வலுவானது. அது முரண்பாட்டைத் தோற்றுவித்து குடும்ப சிதைவை விவாகரத்தை விளைவாக்கிறது.. வன்முறையைச் சூழலை தடுத்துள்ள இஸ்லாத்தை மார்க்கமாகக் கொண்ட முஸ்லிம் குடும்பங்களிலும் அது காணப்படுகின்றது. அதிகளவு விவாகரத்துக்கள் இடம் பெறும் கொழும்புப் பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்களில் பஸ்ஹ் விவாகரத்துக்கள் அதிகரித்துக் கொண்டு செல்வதை காழி நீதிமன்ற அறிக்கை உணர்த்துகின்றது. இந்நிலையில் கொழும்பு பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம் பெறும் வீட்டு வன்முறைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் பரிசீலிப்பதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்பு ரீதியான ஆய்வு முறையினைக் கொண்டுள்ள இந்த ஆய்வு நேர்காணல் மூலம் பெறப்பட்ட முதலாம் நிலைத்தரவுகளுக்களின் பகுப்பாய்வினை பெரிதும் பயன்படுத்துகிறது. காழி நீதிமன்ற ஆவணங்கள், பதிவுப் புத்தகங்கள் மீளாய்வையும் துணையாகக்கொண்டுள்ளது. கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் ஒப்பீட்டளவில் அதிகளவான முரண்பாடுகள் தோன்றுவதற்கு பிரதான காரணம் போதைப் பாவணை. அதனுடன் முறையே தவறானத் தொடர்புகள், உணர்வுச் சிக்கல்கள், வறுமை மற்றும் பொருளாதார நெருக்கடி அதனால் ஏற்பட்ட கடன் சுமை என்பன குடும்பங்களில் முரண்பாட்டு காரணிகளாக அமைந்து காலப்போக்கில் வன்முறையாக பரினமிக்கின்றன. இஸ்லாம் கற்றுத் தந்த குடும்பவியல் கூறுகள் அக்குடும்பங்களில் முறையாகப் பேணப்படாமை இவை அனைத்திற்கும் தலையாய அம்சம் எனலாம். விளைவாக அக்குடும்பப் பெண்கள் உடல், உள, பொருளாதார மற்றும் வாய்மொழி ரீதியிலும் வன்முறைக்குள்ளாகியுள்ளனர். மேலும் அது உடல், உள, பொருளாதார மற்றும் சமூக ரீதியிலும் அவர்களை பாதிப்படையச் செய்துள்ளது. முஸ்லிம் குடும்பங்களில் இடம் பெறும் வன்முறைகள் பற்றி அறியவும் அவற்றுக்கான காரணங்களை கண்டறிந்து வன்முறையை தடுக்கவும் சமூக ஆர்வளர்கள், சட்ட அதிகாரிகள், உளவள ஆலோசகர்கள் போன்றோருக்கு இவ்வாய்வானது துணைபுரியவல்லது.*

***திறவுச் சொற்கள்:*** *முஸ்லிம் குடும்பங்கள், வீட்டு வன்முறைகள், கொழும்புப் பிரதேசம், பஸ்ஹ் விவாகரத்துகள்*

## 1. ஆய்வு பின்னணி:

குடும்பம் இயற்கையான சமூகத்தின் அடிப்படை அலகாகவும் சமூகத்திற்கும் அரசிற்குமான உறுப்பினர்களை உருவாக்கும் ஒரு சிறப்பான சமூக நிறுவனம் என மனித உரிமைப் பிரகடனம் வரையறை செய்கிறது (சுஹீரா, 2016). குடும்ப அமைப்பை உருவாக திருமணம் ஒரு அத்திவாரமாக திகழ்கின்றது (அலி, 2009). திருமணம் நபியின் வழிமுறை என்பதோடு அதனைப் புறக்கணிக்கின்றவர் மார்க்கத்தை புறக்கணித்ததற்கு சமனாவார் என இஸ்லாம் கூறுகின்றது. இந்தவகையில் குடும்பம் என்பது திருமண உறவால் இணையும் கணவன், மனைவி, ஆகியோருடன் அவர்களுக்குபட பிறந்த பிள்ளைகளும் இணைந்து இரத்த பந்தம் என்பவற்றால் ஒன்றிணைந்து உருவாகும் சிறிய சமூக அலகாகும். இத்தகைய குடும்பம் மூலம் சிறந்த உயிரோட்டமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடிகிறது (மஸாஹிர் & இஸ்மியா, 2017).

ஒர் இஸ்லாமிய குடும்ப அமைப்பின் முன்மாதிரி அல்குர்ஆன், சுன்னா என்ற அடிப்படையில் அமைய வேண்டும். இரு வேறுபட்ட இயல்புகளைக் கொண்ட ஆண், பெண் இணைவதன் மூலம் ஏற்படும் திருமண உறவில் கருத்து வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு. அவற்றை முறைப்படி தீர்த்துக் கொள்ளும் படிமுறைகளையும் இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது (சூறா நிஸா: 34, 35). இஸ்லாம் கற்றுத் தந்த முறைப்படி பிணக்குகள் தீர்க்கப்பட்டால் அக்குடும்பம் தொடர்ந்தும் செல்லும். இஸ்லாமிய அணுகுமுறைகள் பேணப்படாமல் போகும் பட்சத்தில் அந்த விரிசல் நிலை மேலும் அதிகரித்து

குடும்பங்களில் பிளவு ஏற்படும். இதனை இஸ்லாம் தடை செய்கிறது. இறை நம்பிக்கைக் கொண்ட எந்தவொரு ஆணும் இறை நம்பிக்கைக் கொண்ட எந்த பெண்ணையும் வெறுத்து ஒதுக்க கூடாது. அல்லாஹ் அனுமதித்த ஒன்றில் அவனுக்கு மிக வெறுப்பானது விவாகரத்து ஆகும். இதலால் விவாகரத்திலிருந்து முஸ்லிம் குடும்பங்களை பாதுகாக்க இஸ்லாம் பல வழிமுறைகளைப் பரிந்துரைத்துள்ளது (இஸ்மாயீல், 2014).

குர்ஆனில் (அந்நிஸா: 34 ஆம்) வசனத்திலுள்ள இலேசாக அடித்தல் எனும் சொல் வன்முறையைத் தூண்டுவதாக பல குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. இது தொடர்பில் நவீன அறிஞர் அப்துல் ஹமித் அபூ சுலைமானின் கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது (Zainab , 2016). இஸ்லாம் பெண்ணுக்கு நீதி வழங்குவதிலும் அவளைக் கண்ணியப்படுத்துவதிலும் ஏனைய மார்க்கத்தை விட உயர்ந்தது. (அந்நிஸா: 19) இல் கணவன் அவளை வெறுத்தாலும் அவளிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என உபதேசிக்கின்றது. நபியவர்கள் தனது இறுதி ஹஜ் பேருரையிலும் பெண்கள் பற்றி உபதேசித்தார்கள். இதில் பெண்களுடன் முரண்பாடுகள் வரும் போது அதனை இஸ்லாமிய வழிமுறையில் தீர்க்கும் படிமுறைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன (திர்மிதி, 1083). நபியவர்கள் தங்களின் மனைவிகளுடன் வாழ்ந்த முறை பற்றியும் அது வன்முறையற்ற சிறப்பான குடும்பத்தை கட்டியெழுப்பிய விதம் பற்றியும் அறிய முடியுமாகவுள்ளது. மனைவியிடத்தில் சிறந்தவராக இருக்கும் ஆண்களே சமூகத்திலும் சிறப்பானவராக இருப்பார் (மன்சூர் அலி, 2014).

''அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களை நீங்கள் வெறுத்த போதிலும் சரியே! ஏனென்றால், நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை வைத்துள்ளான்'' (சூறா நிஸா: 14). இஸ்லாமிய வாழ்க்கையின் உன்னத நிலையை விளங்கிடாதப் பலர் சிறிய பிரச்சினைக்கும் விவாகரத்து சிறந்த தீர்வு என முடிவெடுக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பத்திலும் இஸ்லாம் பல நுணுக்கமான செயல்முறையினைக் கூறுகின்றது. விவாகரத்தை இஸ்லாம் விரும்பவில்லை (நுஸ்லா, 2013). (சூறா அந்நிஸா: 128,129,130) போன்ற வசனங்களில் இன்னும் நிறைய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வன்முறையில்லாத சுமுகமான, அமைதியான, சுபீட்சமான குடும்பத்தைக் கட்டியெழுப்ப அல்குர்ஆன், ஹதீஸ் பல போதனைகளையும், வழிகாட்டல்கலையும் கற்றுத் தந்துள்ளன. அவற்றை முறையாகப் பின்பற்றி நடந்தால் இஸ்லாம் கூறிய குடும்பவியல் கூறுகள் அக்குடும்பங்களில் இடம்பெறும். அப்போது அங்கு முரண்பாடுகளே, அதனால் வன்முறைகளே இருக்காது. இவ்வழிகாட்டல்கள் முறையாகப் பேணப்படாத முஸ்லிம் குடும்பங்களில் வன்முறைகள் தோற்றம் பெறுகிறன. முஸ்லிம் குடும்பங்களிலும் வன்முறையின் தாக்கங்கள் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறியுள்ளன. வன்முறை என்பதற்கு பல கருத்துக்கள் சமூக ஆர்வளர்களிடம் காணப்படுகின்றன. ஒரு நெருக்கமான உறவினர் மூலம் இன்னுமொரு உறவினர் மீது செலுத்தும் உடல், உள அத்துமீறல்கள் வன்முறை ஆகும். இது குறிப்பாக கணவன், மனைவி அல்லது மனைவி, கணவன் மீது செலுத்தும் வன்முறைகள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி வன்முறையானது பெண்களுக்கு எதிராக ஆணாதிக்கத்தைத் தூண்டி அவர்களை துன்பத்திற்கு இட்டுச் செல்லும் விதத்தில் அமையும் எந்தவொரு செயற்பாடுமாகும். அது பெண்களின் தன்னிச்சையான அல்லது பொதுவான செயற்பாடுகளை கட்டுப்படுத்தி அவர்களின் சுதந்திரமான வாழ்க்கையை இழக்கக் கூடிய வகையில் உடலியல், உளவியல், பாலியல் ரீதியான அத்துமீறல்கள் என வரையறுக்கப்பட்டது (UNICEF, 2000).

ஐக்கிய நாடுகள் சபையின் 2006 ஆம் ஆண்டின் அறிக்கை உலகில் மூன்று பெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் அடிக்கப்பட்டோ, வன்புணர்விற்கு வற்புறுத்தப்பட்டோ அல்லது பிற வகையிலோ துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர் எனக் கூறியுள்ளது (Karen Dukess, 2006). குடும்ப வன்முறையின் வடிவங்களாக உடலியல், உளவியல், பாலியல், மனவெழுச்சி, உணர்ச்சி, பொருளாதாரம், வாய்மொழி மற்றும் உடைமை அழித்தல் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன (றியால், 2014). முன்னைய ஆய்வுகளில் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட உயிரியல் காரணிகள் (றியால், 2014), உளவியல் காரணிகள் (Marjie, 2015) என்பவற்றுடன் சமூக காரணியானது மனிதனது நடத்தை, உடலியல், உளவியல், கலாசார, பண்பாடு, ஒழுக்கம் மற்றும் எல்லா செயற்பாடுகளிலும்

மாற்றத்தை ஏற்படுத்துகின்றது (றியால், 2014). இவைப் போன்ற பிரதானக் காரணிகளின் மூலம் பல பொதுக் காரணிகள் தோற்றுவிக்கப்படுகின்றன (Marjie, 2015). இது தவிர இன்னும் கூறப்படாத பலக் காரணங்களும் உண்டு (ஹில்பான், 2016: றியால், 2014: கலையரசன், 2003).

இதில் உடலியல், வாய்மொழி, பாலியல் மற்றும் பொருளாதார ரீதியிலாக அமையக் கூடிய வகையில் தீங்கு அல்லது இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளக் கூடிய அனைத்து வன்முறைகளும் பெண்ணின் உளவியலை தாக்கக் கூடியதாகவும் அமையும் (Youth law, 2019: Roxanne, 2019). அத்துடன் காயத்தையும் நோவினையையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைவது உடல் ரீதியிலான வன்முறைகளாகும் (WHO, 2005: unicef, 2000: Arizona Coalition, 2019). பொருளாதார அடிப்படையில் பெண்களின் முன்னேற்றத்திற்கு தடைவிதிக்கும் செயற்பாடும் அவர்கள் மீதான பொருளாதார வன்முறைகளாகும். பாதிக்கப்பட்டவருக்கு ஏதாவது ஒரு வசனம் உணர்வு ரீதியான பாதிப்பை விளைவிக்குமாயின் அது சொல் சார்ந்த துஷ்பிரயோகம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (றியால், 2014).

உலகிலுள்ள எல்லா நாடுகளும் வன்முறையற்ற குடும்பங்களை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையிலும் 2005 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க வீட்டு வன்முறை தடுப்புச் சட்டம் (PDVA) அமுல்படுத்தப்பட்டது (Violence Act, 2005). இலங்கையில் பல பிரதேசங்களிலுள்ள குடும்பங்களில் வன்முறைக் காரணமாக பெண்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் குறிப்பாக கணிசமான குடும்பங்களை கொண்டுள்ள தலைநகரப் பிரதேசமான கொழும்பில் இந்த வன்முறைக் கலாசாரம் இடம்பெறுவதும், அதிகளவு விவாகரத்துக்கள் பதியப்படுவதும் ஆய்வுகளினால் கண்டறியப்பட்டது (வத்சலா ஜெயசூரிய, 2011). இப்பிரதேசமானது பல்லின மக்களையும், பல் கலாசார சூழலையும் கொண்டது. மேலும் அபிவிருத்தியடைந்ததும் சேரிப்புற சூழலையும் கொண்ட நெருக்கடியான சுற்றுப்புற அமைப்பைக் கொண்டது. பழு நிறைந்த வாழ்க்கை முறையை அம்மக்கள் கொண்டுள்ளனர் (வத்சலா, 2011).

கொழும்புப் பிரதேசத்தில் சுமார் 45,000 முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்களில் இலங்கைச் சோனகர்கள், மலாய், பாகிஸ்தான் மற்றும் இந்திய வம்சர்களும் உள்ளனர் (முஹம்மத் அக்ரம், 2010). அவற்றில் சில முஸ்லிம் குடும்பங்களிலும் வன்முறையின் தாக்கம் அதிகளவு காணப்படுவதுடன் அது அதிக பஸ்ஹ் விவாகரத்துக்களுக்கும் வழிவகுக்கின்றன (பௌசுல், 2015). இஸ்லாம் வன்முறையை தடுத்த போதிலும் இஸ்லாத்தை மார்க்கமாக கொண்டுள்ள முஸ்லிம் குடும்பங்களிலும் வன்முறை சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அது பல குடும்ப பிரச்சினைகளையும் பஸ்ஹ் விவாகரத்துக்களையும் ஏற்படுத்துகிறது. வன்முறைகளின் காரணங்கள் பல ஆய்வுகள் மூலம் முஸ்லிம் குடும்பங்களில் வன்முறையின் காரணத்தையும் அதன் தாக்கத்தையும் எனவே கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் கணவன்- மனைவிக்கிடையில் நிகழும் குடும்ப வன்முறைகளும் அதற்கான காரணங்களும் கண்டறியப்பட வேண்டிய தேவையேற்பட்டது. அந்தப் பின்னணியிலேயே இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறை:

கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் கணவன் மனைவிக்கு இடையில் நிகழும் வன்முறைகளையும் அதற்கான காரணங்களையும் பரிசீலித்தல் இவ்வாய்வின் நோக்கமாகும். அந் நோக்கத்தை அடைந்துக் கொள்ள பண்பு ரீதியிலான ஆய்வு முறையியலைக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத் தரவுகளுக்கு நேர்காணல் முறை பயன்படுத்தப்பட்டது. நேர்காணலுக்குறப்பட்டோர் குறிக்கோள் மாதிரியைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள் முக்கியமானவர்களாக கொழும்புப் பிரதேச காழி நீதிபதிகள், திருமண நல்லிணக்க சபை அங்கத்தவர்கள், உளவள ஆலோசகர்கள், பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் இஸ்லாமிய நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் போன்றோர் காணப்படுகின்றனர். முஸ்லிம் குடும்பங்களின் வீட்டு வன்முறை தொடர்பான ஆழமான புரிதலைப் பெற அவர்களுடன் ஒழுங்கமைக்கப்படாத முறையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. கொழும்புப் பிரதேசத்தில் இடம் பெறும் வீட்டு வன்முறைக்கான காரணங்கள் மற்றும் வன்முறையின் வடிவங்கள் என்பன பற்றிய தகவல்கள்

கேட்டறியப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காகவும், மேலதிக விபரங்களுக்காகவும் குருக்குவெட்டு தகவல்களாக ஒழுங்கமைக்கப்பட்ட காழி நீதிமன்ற ஆவணங்கள், பதிவுப் புத்தகங்கள் என்பன அவதானிப்பின் மூலம் மிக முக்கிய தரவுகளாக கொள்ளப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் அனைத்தும் பகுப்பாய்விற்கு உற்படுத்தப்பட்டன.

## 3. கலந்துரையாடல்களும் கண்டறிதல்களும்:

நேர்காணலின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் பகுப்பாய்விற்கமைய பிரதேச முஸ்லிம் குடும்பத்தில் இடம் பெறும் வீட்டு வன்முறைக்கான காரணங்கள் மற்றும் வன்முறையின் வடிவங்கள் என்பன கண்டறியப்பட்டன. இலங்கையில் இன, மத, பேதம் இன்றி பல குடும்பங்களிலும் பல்வேறு வகையிலும் முரண்பாடுகள் உருவாகி அது பெண்கள் மீதான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது. அதிலும் கணிசமான குடும்பத்தையும், சன நெருக்கடியும் கொண்ட கொழும்பு பிரதேசமானது அதிகமான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறும் ஒரு நகரமாக காணப்படுகின்றது. இதன் விளைவாக விவாகரத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்றன. அந்த வகையில் பிரதேச முஸ்லிம் குடும்பங்களிலும் விவாகரத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது காழி நீதிமன்ற அறிக்கைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அவற்றிலும் குறிப்பாக பஸ்ஹ் விவாகரத்துக்களே மிக அதிகம். பிரதேச முஸ்லிம் பெண்கள் தமது கணவர் தம்மை வன்முறைப்படுத்துவதாக முறைப்பாடு செய்து ஒவ்வொரு மாதமும் அதிகளவானவர்கள் பஸ்ஹ் விவாகரத்துக் கோரி வருவதாகவும் காழி நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். அதற்கான காரணங்களை ஆழமாக கேட்டறிந்து இரு தரப்பினர்களையும் முறையாக விசாரித்தே முடிவுகள் கொடுக்கப்படுகின்றன.

குடும்பம் மனித இனத்தின் அடிப்படையாகவும், பிரபஞ்ச நியதியாகவும் காணப்படுகின்றமையினாலே இஸ்லாம் ஏனைய மதங்களை விட குடும்ப ஒழுங்கு பற்றி அதிகம் கரிசணை காட்டியுள்ளது. ஏனைய விடயங்களை பேசாத அளவிற்கு குடும்ப வாழ்க்கைப் பற்றி அடிப்படை முதல் கிளை சட்டங்கள் வரை அனைத்தையும் விரிவாக பேசியுள்ளது. இஸ்லாமிய சமூக அமைப்பின் பிரதான அலகு குடும்பம் என்பதால் அவ்வமைப்பின் எழுச்சி, வீழ்ச்சி குடும்பத்தின் அடித்தளத்திலேயே அமைந்துள்ளது. அக்குடும்பம் ஆரோக்கியமாக திகழ்கின்ற போதே இஸ்லாமிய சமூகம் தலை நிமிர்ந்து நிற்கும். எனினும் இவ்வகையான வன்முறைச் செயற்பாடுகள் அமைதியான, சுபீட்சமான குடும்பத்தை உருவாக்குவதற்கு தடையாகவுள்ளது.

திருமணத்தின் மூலம் இரு வேறுபட்ட இயல்புகள், நடத்தைகள் கொண்ட ஆண், பெண் இணைவதனால் இருவர் மத்தியிலும் கருத்துநிலை, எண்ணங்கள், தோற்றப்பாடு என்பவற்றில் சிறு சிறு வித்தியாசங்கள் காணப்படும். அது மற்றவரின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருக்கும். இந்நிலையில் பிரச்சினைகள் உருவாகும். சிறு பிணக்குகள் ஏற்படும் போது முறையற்ற அணுகுமுறைகளினால் அது வன்முறையாக உருவெடுக்கின்றன. இவ்வாறு பிரச்சினைகள் உருவெடுக்கும் போது அவற்றை தீர்க்கும் வழிகாட்டல்களும் இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளன. சூரா நிஸாவின் 34, 35 ஆம் வசனம் பிணக்குகளைத் தீர்க்கும் வழிமுறைகளை கூறியுள்ளது. இந்த நான்கு படிமுறைகளும் முறையாகப் பேணப்பட வேண்டும். அது தவறப்படும் பட்சத்திலே கணவன் - மனைவிக்கு இடையில் பிரிவு ஏற்படுகின்றன.

வன்முறைச் சம்பவங்களின் மூலம் தனிமனித, குடும்ப மற்றும் சமூக ரீதியிலும் பல விளைவுகள் ஏற்படுகின்றன. அவற்றில் விவாகரத்துக்கள் அதிகரித்து வருவது மிகப் பாரிய விளைவாகும். கொழும்புப் பிரதேசத்தில் ஒவ்வொரு வருடமும் பஸ்ஹ் விவாகரத்துக்கள் அதிகரித்து வருவது முஸ்லிம் குடும்பங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறன. கொழும்புப் பிரதேசத்தில் 2017 முதல் 2019 வரையானக் காலப்பிரிவில் விண்ணப்பிக்கப்பட்ட தலாக் மற்றும் பஸ்ஹ் விவாகரத்துக்கள் பற்றிய விபரங்களும், முடிவடைந்த தலாக் மற்றும் பஸ்ஹ் விவாகரத்துக்கள் பற்றிய விபரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1: கொழும்புப் பிரதேச காழி நீதிமன்றங்களினது (2017- 2019) விவாகரத்து விபரம்

| வருடம் | விண்ணப்பிக்கப்பட்ட தலாக் விவாகரத்துக்கள் | விண்ணப்பிக்கப்பட்ட பஸ்ஹ் விவாகரத்துக்கள் | முடிவடைந்த தலாக் விவாகரத்துக்கள் | முடிவடைந்த பஸ்ஹ் விவாகரத்துக்கள் |
|---|---|---|---|---|
| **2017** | **65** | **105** | **29** | **83** |
| **2018** | **105** | **290** | **53** | **100** |
| **2019** | **84** | **298** | **41** | **102** |
| **மொத்தம்** | **254** | **693** | **123** | **285** |

**மூலம்: காழி நீதிமன்ற ஆவணம் (2017- 2019)**

அட்டவணையின் படி 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பிக்கப்பட்ட தலாக் விவாகரத்து முறையே 65, 105, 84 ஆகும். அதில் முடிவடைந்த தலாக் விவாகரத்து முறையே 29, 53, 41 ஆகும். அதுபோல 2017 ஆம் ஆண்டில் 105 பஸ்ஹ் விவாகரத்துக்களும், 2018 இல் 290 விவாகரத்துக்களும், 2019 இல் 298 விவாகரத்துக்களும் விண்ணப்பிக்கப்பட்டன. இவற்றில் முறையே 83, 100, 102 பஸ்ஹ் விவாகரத்துக்கள் முடிவடைந்துள்ளன. இதில் 2017 இல் விண்ணப்பிக்கப்பட்ட தலாக் விவாகரத்தில் 44.6% வீதமானவையும், 2018 இல் 50.4% வீதமானவையும், 2019 இல் 50.6% வீதமானவையும் முடிவடைந்துள்ளன. அதுபோல 2017 இல் விண்ணப்பிக்கப்பட்ட பஸ்ஹ் விவாகரத்தில் 79% வீதமானவையும், 2018 இல் 34.4% வீதமானவையும், 2019 இல் 34.6% வீதமானவையும் முடிவடைந்துள்ளன.

கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் அதிகளவான பஸ்ஹ் விவாகரத்துக்கள் பதியப்படுவதற்கான காரணங்களை கண்டறிவது மிக முக்கிய தேவையாகவுள்ளது. அதன் அடிப்படையில் காழி நீதிபதிகளினால் வழக்குகளின் அடிப்படையைக் கொண்டு எடுத்துக் கூறப்பட்டன. கணவன், மனைவி இரு தரப்பினர்களினதும் தவறுகள் காணப்படுவதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது. எனினும், ஆண்கள் தலாக் கொடுப்பதற்கு பெரிதும் யோசனை செய்வதாகவும், பெண்கள் சிறு சிறு பிரச்சினைகளுக்கும் உடனடியாக அவசர முடிவுகள் எடுத்து பஸ்ஹ் விவாகரத்து கோரி வருவதாகவும் தெரிவித்தனர். நியாயமான காரணங்களுக்காக பஸ்ஹ் கோருவதை மட்டுமே இங்குள்ள காழி நீதிபதிகள் அனுமதிக்கின்றனர். அவர்களுக்கும் முறையான வழிகாட்டல்களை கொடுக்கப்பட்ட பின்னரே விவாகரத்துக்களையும் கொடுக்கின்றனர். இப்பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் கணிசமானளவு விவாகரத்துக்கள் வன்முறைக்காரணமாகவே பதியப்பட்டுள்ளன. வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றமையே பஸ்ஹ் விவாகரத்துக்களும் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இதனால் வன்முறைச் செயற்பாடுகள் உருவாவதற்கான காரணங்கள் பற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டது. அடையாளம் காணப்பட்ட காரணங்களின் மூலம் வன்முறையை தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

முஸ்லிம் குடும்பங்களிலுள்ள ஆண், பெண் தங்களது திருமணத்தின் முன்னரான திருமண வாழ்க்கை தொடர்பான அறிவு, தெளிவு என்பன முறையாக கிடைக்கப் பெறாமையினால் அவர்களுக்கு திருமண வாழ்வு, கணவன், மனைவியின் பொறுப்புக்கள், கடமைகள் என்ன என்பது பற்றிய இஸ்லாமிய வழிகாட்டல்கள், ஆலோசனைகளை அறியாதுள்ளனர். இஸ்லாம் குடும்ப வாழ்க்கைத் தொடர்பாக வழங்கியுள்ள அறிவுரைகளை முறையாக பேணாமையே பிணக்குகளை தோற்றுவித்துள்ளன. (Jill Duba, 1975) ஆய்வு முடிவு அதனை மேலும் உறுதி செய்கிறது. மேலும் அக்குடும்பங்களில் இஸ்லாமிய குடும்பவியல் கூறுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனாலே குடும்பங்களில் இடம் பெறும் சிறு விடயங்களும் பெறும் பிரச்சினையாக உருவெடுக்கின்றன. ஆண், பெண் இருவருக்கும் பொறுமை, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை மற்றும் விட்டுக்கொடுப்பு என்பன குறைவாகக்

காணப்படுகின்றதுடன், குடும்பங்களில் உருவாகின்ற சிறு முரண்பாடுகளையும் பிழையான அணுகுறையின் மூலம் பெரிய சண்டைகளாக மாற்றிவிடுகின்றனர். இதனால் வன்முறை உருவாக்கப்படுகிறது. இஸ்லாத்தை முறையாகப் புரிந்துக் கொண்ட ஒருவரின் குடும்பத்தில் வன்முறை நிகழ்த்தப்பட மாட்டாது என்ற கருத்தும் (ZAINAB, 2016) முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பெண்கள் மீது கருணை, அன்பு காட்டுவது, அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி நபி அவர்கள் வலியுறுத்தியுள்ளமையினால் அதனைப் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களின் வீடுகளில் பெண்கள் மீது அநீதி விளைவிக்கும் வன்முறைகள் நிகழாது. இறுதி ஹஜ் பேருரையில் நபியவர்கள் பெண்களை கண்ணியப்படுத்துமாறும் பிணக்குகள் வரும் போது கையாளும் வழிமுறைகளையும் கற்றுத் தந்துள்ளனர்.

அதுபோல கொழும்புப் பிரதேசங்களில் அதன் கலப்புச் சூழல் அவர்களிடையே தவறான போதைப்பொருள் பாவணைகள் அதிகம் ஏற்படுத்துவதாகவும் அதுவே அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் காரணமாக திகழ்கிறது எனவும் கூறப்பட்டது. கணவனது தொடர் போதைப் பாவணை மூலம் உருவாகும் வருமான பற்றாக்குறை, கடன் என்பன வன்முறையை அதிகம் தோற்றுவித்துள்ளதாகவும் கருத்து தெரிவித்தனர். மதுபானம், கஜ்சா, சிகரட், ஐஸ் எனும் ஒருவகை போதைத் தரும் தூள் மற்றும் ஹெரோஹின் போன்ற போதைப்பொருள் பாவணைகள் பெரிதும் உபயோகிக்கப்படுகின்றன. இலங்கையில் அதிகம் போதைப் பாவணை உள்ள இடங்களில் கொழும்புப் பிரதேசம் முதலாவது இடத்தில் உள்ளது (அன்வர், 2018). சேரிப்புற பிரதேசங்களில் இப்பாவணை பெரிதும் காணப்படுகின்றன. வசதி படைத்தவர்கள் ஹெரோஹின் பாவணை, மது, போதை மருந்து போன்றன உபயோகிக்கின்றனர். இதில் முஸ்லிம்கள் விதிவிலக்கல்ல. முஸ்லிம்களில் பலர் இப்பாவணைக்கு அடிமையாகியுள்ளதால் முஸ்லிம் குடும்பங்கள் பல பாதிப்படைகின்றன. போதையுடன் வரும் கணவர் குடும்ப செலவிற்கு பணம் கொடுக்காமை, மனைவியிடம் பணம் கேட்டு சண்டையிடுதல் மற்றும் போதைக் காரணமாக தவறான வார்த்தைகள் உபயோகித்தல் மற்றும் உடல் ரீதியிலான வன்முறையை மேற்கொள்ளல் போன்ற காரணங்களால் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. பின் மனைவியின் எதிர் பேச்சால் பிரச்சினைகள் தாக்குதல்களாக மாற்றம் காணப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் அதிகமான குடும்பங்களில் வன்முறை உருவாவதற்கு போதைப்பாவணையே மூல காரணமாக உள்ளது. இது சாரா (Sarah, 2006) இன் ஆய்வு முடிவை ஒத்துள்ளது.

அதுபோல நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் மூலமும் பல குடும்பங்களில் பிரச்சினைகள் உருவாகின்றன. சமூக வலைத்தளங்களில் காட்டப்படும் தவறான வழிகாட்டல்களின் மூலம் பழக்கப்பட்ட போலியான வாழ்க்கைகளினால் பல குடும்பங்களில் சிதைவு உருவாகின்றது. கற்பனை செய்யப்பட்ட குடும்ப வாழ்க்கையின் மூலம் உருவாகும் எதிர்பார்ப்புக்கள், ஆசை என்பன நிஜ வாழ்க்கையில் கிடைக்கப் பெறவில்லையாயின் கணவன், மனைவி இருவருக்கும் தனது குடும்ப வாழ்க்கையில் அதிருப்தியை ஏற்படுகின்றன. திரைப்படங்கள், நாடகங்களில் வரும் போலி கதாப்பாத்திரங்கள் மூலம் கணவன்- மனைவி உறவு, குடும்ப வாழ்க்கை என்பன சித்தரிக்கப்படுகின்றன. அதுபோல சமூக வலைத்தளங்களின் மூலம் உருவாகும் நட்புக்கள் குடும்ப வாழ்க்கையை பிளவுபடுத்துகின்றன. ஆண், பெண் இருவரும் தங்களின் சமூக வலைத்தள நட்புக்களுடன் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். அது கணவன், மனைவிக்குள் சந்தேகம், முறையற்ற தொடர்பு என்பன ஏற்பட்டு முரண்பாடுகள் வர காரணமாக அமைகின்றன. மற்றும் திருமணத்திற்கு முன்னரான காதல் விவகாரங்கள் திருமணத்தின் பின்னரும் பிரச்சினையை உருவாக்குகின்றது. காதல் விவகாரங்களை தடுத்து வற்புறுத்தி திருமணம் செய்து வைக்கின்றனர். அது திருமணத்தின் பின்னர் முறையற்ற தொடர்பாக மாறி குடும்ப வாழ்க்கையில் முரண்பாடுகளை உருவாக்குகிறது. இவற்றை கையாளும் விதம் வன்முறையாக மாற்றம் கண்டுள்ளது.

இன்னும் சில குடும்பங்களில் வன்முறைகள் தோன்றுவதற்கு காரணமாக பொருளாதாரப் பற்றாக்குறை திகழ்கிறது. கணவனின் தொழில் குடும்ப முன்னேற்றத்திற்கு போதுமாகதாக இல்லாமை முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது. கொழும்புப் பிரதேச நடுத்தர மக்களில் அதிகமானோர் புறக்கோட்டையில் தட்டுக்கடை வைப்பவர்கள், முச்சக்கர வண்டி ஓட்டுபவர்கள் காணப்படுகின்றனர். இவர்களது வறுமானப் பற்றாக்குறை அக்குடும்பங்களில் பொருளாதார ரீதியில் தாக்கத்தை

ஏற்படுத்துகின்றன. வருமானக் குறைவு, வேலையின்மை, நகர மக்களின் அதிகரித்த செலவுகள் என்பன பிரச்சினைகளை உருவாக்குகின்றன. சில பெண்கள் தங்களது பராமரிப்புக்காக அதிகம் பணம் கேட்கின்றனர். மனைவியின் தொடர் தொந்தரவுகள் மூலம் கணவன் கோபமடைந்து மனைவியை வாய்மொழி மூலம் தாக்குகிறார். இந்நிலை தொடரும் போது அது உடல், உள ரீதியான வன்முறைகளை தோற்றுவிக்கின்றது. அதுபோல சிலர் போதைப் பாவணைக்காக முழு பணத்தையும் செலவழிக்கின்றனர். இதன் மூலமே பிணக்குகள் உருவாகின்றன.

இது தவிர இன்னும் பல காரணங்கள் உள்ளது. கணவன், மனைவியின் உடலியல் திருப்தியின்மையும் வன்முறைகள் உருவாக ஏதுவான காரணியகும். அதாவது திருமணத்தின் நோக்கங்களில் ஆகுமான முறையில் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதும் ஒன்றாகும். வேலைப் பழுவுடன் கணவனும், வீட்டு வேலைகளுடன் மனைவியும் இருப்பதால் இருவருக்கும் மனம் விட்டுப் பேசக் கூட நேரம் போதாமல் உள்ளது. இது அந்த உறவில் சிறு சிறு விரிசல் நிலையை ஏற்படுத்துகின்றன. மற்றும் மனைவி எப்போதும் கணவனுக்கு கண் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என இஸ்லாம் கூறியுள்ளது. அவளது உடல், உடை அழகாகவும், சுத்தமாகவும் இருந்தாலே வீட்டிற்கு வரும் கணவனுக்கு மனைவி மீது அன்பு, ஆசை ஏற்படும். எனினும் இல்லத்தரசி வீட்டில் பல வேலைகளை செய்து முடித்த களைப்பில் நேர்த்தியற்று இருப்பது வெளியில் பல பேரை பார்த்து, பழகி இருக்கும் கணவருக்கு வீட்டுக்கு வரும் போது மனைவியைக் கண்டதும் அதிருப்தியை ஏற்படுத்தும். இது ஒருவகையில் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன. அதே சமயம் வீட்டிற்கு வரும் கணவனை ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் மனைவிக்கு கணவனின் தொழில் பழு மனைவியிடம் நெருங்குவதை தடை செய்யும் போது அது அவளுக்கு பாரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தும். இவ்வாறான நடுநிலையற்ற குடும்ப முறைகளே இரு தரப்பிலும் தவறான தொடர்புகளை உருவாக்குகின்றன. கொழும்புப் பிரதேசத்தின் பிரத்தியோக பழு நிறைந்த சூழலும் அதற்கு ஏதுவாக அமைகின்றது. இது குடும்பங்களில் பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றன. சிலர் விவாகரத்தை நோக்கமாகக் கொண்டும் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

மேலும் கணவனின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் மூலம் நீண்ட பிரிவு ஏற்படுகின்றது. அந்த சமயங்களில் மனைவி தேவைகளுக்காக வெளியில் செல்கின்றார். அப்போது வெளிநபர்களுடனான தொடர்புகள் இடம்பெறுகின்றன. அது குடும்பங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கணவனின் அணுகுமுறைகள் கடினமாக இருக்கும். அதுபோல கணவன் வெளிநாட்டுகளில் இன்னுமொரு தொடர்பு கொண்டு மனைவியை ஒதுக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகள் அவர்கள் மீதான வன்முறையாக மாறுகின்றன. இவ்வாறான காரணங்கள் கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. இந்த முரண்பாடுகள் மூலம் அக்குடும்பத்தில் வன்முறைகள் உருவாகின்றன. கணவன் தன் மனைவியை உடல் ரீதியாக வன்முறைக்கு ஆளாக்கியுள்ளார். அடித்தல், உதைத்தல், கட்டி வைத்தல், பொருட்களால் வீசி எறிதல் மற்றும் சூடு வைத்தல் என்பன அதில் உள்ளடங்கப்படுகின்றன. உள ரீதியாக காயப்படுத்தும் முகமாக கடுமையாக ஏசுதல், அவதூறு கூறுதல், உதாசீனப்படுத்தல், அவமானப்படுத்தல், புறக்கணித்தல் என்பனவும், பொருளாதார ரீதியாக அடிப்படை தேவையை இல்லாமல் செய்தல், பெற்றோரிடமிருந்து பணம் கொண்டு வரும்படி வற்புறுத்தல் போன்ற வன்முறைகளும் இப்பிரதேசத்தில் இடம்பெறுகின்றன என்பதும் ஆய்வின் மூலம் கண்டுகொள்ளப்பட்டது.

அதிகமான பெண்கள் தமது கணவனால் வன்முறைக்கு உற்படுத்தப்படும் போது பெரிதும் உளவியல் ரீதியில் பாதிப்படைகின்றனர். மன அழுத்தம் காரணமாக வெறுப்பு, பதகளிப்பு, விரக்தி என்பனவும், வன்முறையால் அவர்களது உடலில் காயங்கள், தழும்புகள் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பெண்களுடன் உரையாடும் போது அறிய முடியும் என உளவள ஆலோசகர்களிடமிருந்து அறிய முடிந்தது. அத்துடன் பொருளாதார ரீதியிலும் பெருமளவில் பாதிப்படைந்து அப்பெண்களையும், அவர்களது பிள்ளைகளையும் பராமரிப்பது பெரிதும் சிரமமானதாகவும், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியாத நிலையும் காணப்படுவதையும் அறிய முடிகின்றன. அதிகளவான முஸ்லிம் பெண்கள் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படுவதாகவும், அவர்களது வாழ்வை முறையாகக் கொண்டு செல்ல முடியாமல் அப்பெண்கள் தற்கொலை முயற்சிகளை மேற்


கொள்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளன. உடலியல், உளவியல் ரீதியில் பல வன்முறைகளை அனுபவித்தாலும் அதனை அவர்கள் சகித்துக் கொண்டு தம் பிள்ளைகளுக்காக வாழ்வதையும் காண முடிகின்றன. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தம்மையும் தமது பிள்ளைகளையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாக்க ஏதாவதொரு தொழிலை செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலையில் உள்ளனர். இதனால் அவர்கள் பல இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. அப்போது கணவனையற்று தனிமையில் இருக்கும் பெண்கள் பல சமுதாயப் பிரச்சினைகளையும் எதிர்க்க வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறான வன்முறைகளும் விவாகரத்துக்களும் இடம் பெறுவதற்கான காரணம் என்ன என்பதை ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கையில், அக்குடும்பங்களில் இஸ்லாமியக் குடும்பவியல் கூறுகள் பேணப்பட்டனவா என்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் குடும்ப அங்கத்தவர்களும் இஸ்லாம் கற்றுத் தந்த வழிகளில் தமக்குரிய கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை முறையாகப் பேணி நடந்துக் கொள்வது பிணக்குகளற்ற அமைதியான, சுபீட்சமான குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக அமையும். ஒரு தனிமனிதன் தனது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் பற்றி இஸ்லாம் ஆழமான வழிகாட்டல்களை கற்றுத் தந்துள்ளது. தனிமனிதன் ஒன்று சேறும் போது உருவாகும் குடும்ப அமைப்பு இஸ்லாமிய குடும்பவியல் கூறுகளை பேணும் போதே அக்குடும்பம் மார்க்கத்தின் அடிப்படையில் நகரும். அதுவே முரண்பாடுகளையும் விவாகரத்துக்களையும் களைத்தெரியும்.

இல்லற வாழ்வில் இன்பத்தை மட்டும் எதிர்ப்பார்க்கக் கூடாது. அதில் பலப் பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டம், திருப்தியின்மை போன்ற பல கோணங்கள் ஏற்படும். அதை முறையே இருவருமே பேசித் தீர்த்துக் கொள்வது அவசியம். விட்டுக்கொடுப்புக்கள், சகிப்புத்தன்மை, தியாகம், பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு என்பவற்றை கணவன் மனைவி தன் குடும்ப வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமே விவாகரத்து எனும் விடயத்தைக் குறைக்க முடியும். குறிப்பாக பெண்கள் மீது கருணை, அன்பு காட்டுவது, அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி நபி அவர்கள் வலியுறுத்தியுள்ளமையினால் அதனைப் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களின் வீடுகளில் பெண்கள் மீது அநீதி விளைவிக்கும் வன்முறைகள் நிகழாது. சூரா நிஸாவின் 34 ஆம் வசனம் பிணக்குகளைப் படிப்படியாக தீர்க்கும் வழிமுறைகளை கற்றுத் தந்துள்ளது. கணவனின் கோபத்தை தணிக்கச் செய்யும் இவ்வசனம் மனைவி மீதான வெறுப்பின் வேகத்தை குறைத்து அவளை பாதுகாக்கிறது. இங்கு தோன்றவிருக்கும் பல பிரச்சினைகளையும் வன்முறைகளையும் இஸ்லாம் தடுத்து பெண்களை வன்முறையற்ற குடும்பங்களில் வாழ வைக்க எத்தணிக்கின்றது.

மேலும் விவாகரத்து இறுதி முடிவாக அமைந்த பின்னரும் கணவன் மனைவியை இணைக்கும் முயற்சியையே இஸ்லாம் மேற்கொள்கின்றது. அதாவது ஒரே தடவையில் தலாக் கூறாமல் தவணையின் அடிப்படையில் கூறுவது மற்றும் தலாக்கிற்காக இத்தா இருக்கும் போது பெண் கணவனின் வீட்டில் இருத்தல் போன்றன முக்கியமானதாகும். அப்போது அவளது பராமரிப்பு கணவனுக்கே பொறுப்பு என்ற விதிகளையும் போட்டுள்ளது. அப்போதாவது இருவரின் மனம் மாற்றம் பெற்று மீண்டுக் கொள்ள அவகாசம் உள்ளது. மீண்டுக் கொள்வதை வரவேற்கின்றது. இவ்வகையாக அவகாசங்கள் கொடுத்து முடியுமான வரை விவாகரத்தை தடுக்கும் முயற்சியையே இஸ்லாம் மேற்கொள்கிறது.

வரைபடம் 1: கொழும்புப் பிரதேச காழி நீதிமன்றங்களினது (2017- 2019) விவாகரத்து விபரம்



மூலம்: காழி நீதிமன்ற ஆவணம் (2017- 2019)

ஆய்வு பிரதேசமான கொழும்புப் பிரதேசம் அதிகளவான பஸ்ஹ் விவாகரத்துக்கள் இடம் பெறும் ஒரு நகரமாக உள்ளது. இது வருடா வருடம் அதிகரித்திருப்பதை வரைப்படத்தில் காண முடிகின்றது. எனினும் விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து விவாகரத்துக்களும் முடிவடைவதில்லை. அதில் சிலவற்றுக்கு உளவள ஆலோசணைகள் கொடுத்து சமரசப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. விவாகரத்து கொடுக்க முன்னர் காழி நீதிபதிகள் குறைந்தது 2 மாதங்கள் உளவளத்துணை பெறுவதற்காக தம்பதிகளை Care Line Counseling நிறுவனத்திற்கு அனுப்பி வைத்து சமரசப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்நிறுவனமானது காழி நீதிமன்றங்களில் விண்ணப்பிக்கப்படும் விவாகரத்துக்களை சமரசப்படுத்தும் உளவள ஆலோசணை மையங்களாகும். மேலும் அங்கு கொடுக்கப்படும் உளவளத்துணைகள் 2 வழிமுறைகளில் இடம்பெறுகிறது. முதலில் தனிப்பட்ட முறையில் கணவன், மனைவி இருவரையும் வெவ்வேறாக வைத்து ஆலோசணைகள் கொடுக்கப்படுகிறது. அதன் பின்னர் இருவரையும் ஒன்றாக வைத்து குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவம் மற்றும் அவர்களின் குடும்பங்களில் உருவான பிணக்கு பற்றியும் அதனை தீர்த்து வைக்கும் முறைகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதனுடன் இஸ்லாமிய போதனைகளையும் வழிகாட்டுகின்றனர். கணவன், மனைவி சமரசம் பெறும் வரையில் உளவள ஆலோசணைகள் கொடுக்கப்படுகின்றன. எனினும் கணவன், மனைவி இருவரும் மிக குறைந்த தவணைகளில் மட்டுமே ஆலோசணைப் பெற வருவதாகவும் அறியக் கிடைத்தது. காழி நீதிபதிகளின் வற்புறுத்தலுக்காக மட்டும் குறைந்தது 2 தவணைகளுக்கு வந்து ஆலோசணைப் பெறுவதாகவும், சிலர் எவ்வளவு ஆலோசணைகள் கொடுத்தாலும் பிடிவாதமாக வன்முறைச் செயற்பாடுகளை விடாமலும் தொடர்ந்தும் செய்வதாகவும் உளவள ஆலோசகர்கள் தெரிவித்தனர். அதுபோல சமரசப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டாலும் சில பெண்கள் விவாகரத்து பெற எடுத்த முடிவை ஒருபோதும் மாற்ற முடியாது என தெரிவித்துள்ளதும் அறியக் கிடைத்தது. இவ்வாறு கொழும்பு பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம் பெறும் வன்முறைக்கான காரணங்கள் பற்றியும், அதன் மூலம் ஏற்படும் விளைவுகள் பற்றியும் தகவல்கள் கண்டறியப்பட்டன.

## 4. முடிவுரை

அதிகளவான பஸ்ஹ் விவாகரத்துக்களை பதியப்படும் இடமாகவுள்ள ஆய்வுப் பிரதேசத்தில் பஸ்ஹ் விவாகரத்துக்கள் அதிகரித்ததற்கான முதன்மைக் காரணமாக குடும்ப வன்முறைகளே காணப்படுகின்றது என்பது நோக்கத்தக்கது. இந்நிலையில் அப்பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் அதிகளவான முரண்பாடுகள் தோன்றுவதற்கும், வன்முறைகள் உருவாவதற்கும் காரணங்களுள் பிரதானமாக போதைப் பாவணையே திகழ்ந்துள்ளது. கலப்புச் சூழலினைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தில் அதிகரித்து வரும் போதைப் பாவணை குடும்பங்களில் பல முரண்பாடுகளைத் ஏற்படுத்தியுள்ளன. அது தோற்றுவிக்கும் வறுமை, பொருளாதாரப் பற்றாக்குறை, கடன்சுமை என்பனவும் நிலைமையை மோசப்படுத்தியுள்ளன. இதன் மூலம் உருவான சிறு சண்டைகள் காலப்போக்கில் வன்முறையாகத் தோற்றம் கண்டுள்ளன. மேலும் கணவன், மனைவியின் தவறானத் தொடர்பு, உணர்வுச் சிக்கல் மற்றும் ஏனைய குடும்ப சண்டைகள் என்பனவும் முரண்பாடுகளை உருவாக்க வலிகோலியுள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் கணவன், மனைவிக்குள் இருக்கும் உறவுகளில் விரிசல் நிலையை ஏற்படுத்தி அவர்களின் உறவை பிளவுப்படுத்தியுள்ளன. மேற்சொன்ன சூழலமைவுக்கு பல காரணங்கள் ஏதுவான இருந்த போதிலும் மார்க்க பற்றும் மற்றும் அறிவின்மையுமே அனைத்திற்கும் தலையாய அம்சமாக திகழ்கிறது எனலாம். இஸ்லாமிய குடும்பவியல் கூறுகள் அக்குடும்பங்களில் முறையாகப் பேணப்படாமையினாலே அவற்றுள் முரண்பாடுகளும், வன்முறைகளும் தலைப்பட ஏதுவாகியுள்ளது. இஸ்லாம் வன்மையாக தடைசெய்துள்ள போதைப் பாவணை, தவறான உறவு என்பன இவர்களிடத்தில் காணப்படுகின்றமை இதற்க எடுத்துக்காட்டு. இதுவே உடல், உள, பொருளாதார, பாலியல் மற்றும் வாய்மொழி மூலமான வன்முறைகளாக உருவெடுத்துள்ளன. இது உடல், உள, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் அதிகளவான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ்வகையான வன்முறைகளையும் விவாகரத்துக்களையும் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு பிரதேசத்திற்கும் திருமண நல்லிணக்க சபை உருவாக்கப்பட வேண்டும். திருமண வாழ்க்கைத் தொடர்பான இஸ்லாமிய குடும்ப

உளவளத்துணை மூன்று பிரிவுகளாக இடம்பெறுதல் வேண்டும். அதாவது திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை, திருமண உளவளத்துணை, பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகு கொடுக்கும் உளவளத்துணை என வகைப்படுத்தப்பட்டு நிகழ்த்தப்பட வேண்டும். மேலும் பிரதேச முஸ்லிம்களுக்கு இஸ்லாமியக் குடும்பச் சூழலின் முக்கியத்துவம் பற்றியும் இஸ்லாமிய குடும்பவியல் கூறுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட வேண்டும். இவ்வாறான ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தும் போது முஸ்லிம் குடும்பங்களில் வன்முறையின் தாக்கத்தையும் பஸ்ஹ் விவாகரத்துக்களின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்க முடியும்.

## 5. உசாத்துணைகள்


Ali, M. (Translated by). Omar Sheriff. (2009). *Ideal Muslim Family*. Chennai; Darul Huda Publication.

Achini, C., Jayathilaka., Krishna. & Junko, Y. (2010). Intimate Partner Violence in Srilanka. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.semanticscholar.org

Arizona Coalition. (2019). What is Domestic Violence. Retrieved (2019.10.4). from: http;// w.w.w.acesdv.org.

Azizah, H. (2003). An Islamic Perspective on Domestic Violence. Retrieved (2019.10.4).from: http;//w.w.w.heinoline.org

Douki, S., Nacef, F., Bousker, A. & Ghachen, R. (2003). Violence Against Women in Arab and Islamic Countries. Retrieved (2019.10.5). from: http;//w.w.w.link.springer.com

Huecker, M.R. (2016). Domestic Violence. Retrieved (2019.10.5). from: http;//w.w.w. ncbi. nlm. nih. gov.

Jill Duba. (1975). The Role of Religion in Marriage and Family Counseling. Retrieved (2019.10.4). from: http;//w.w.w. bookgoogle.com

Karen Dukess. (2006). Some of the Biggest Victims of Domestic Violence are the Smallest.Unicef. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.unicef-org

Life Line. (2016). Domestic & Family Violence. Retrieved (2019.10.4). from: http;//w.w.w. Lifeline.org.au

Melinda. (2019). Domestic Violence and Abuse. Retrieved (2019.10.5). from: http;//w.w.w. Helpguid.org.

Marjie, L. (2015.10.15). We Need to Talk about Domestic Violence in our Community.Retrieved (2019.10.5). from: http;//w.w.w.google.com

Mehr Khan. (2000). Domestic Violence Against Women and Girls. Unicef, Italy. Retrieved (2019. 10 .4). from: http;//w.w.w.unicef-irc.org

Nishad, M.N. (2016). Arulha`lai Sumandhu Varum Uravukhal. Galgamuva; Bare'em Research Centre.

Nuzila, I. (2017). The Role of Islam in Preventing Domestic Violence Towards Muslim Women in Azerbaijan. Retrieved (2019.10.5). From ; http;//w.w.w. deripark.org

Padmini, S. & Sivagurunathan```, S. (2001). The Prevalence and Patternof Wife Beating in The Trincomalee District in East Sri Lanka. Retrieved (2019.10.5). from: http;//w.w.w.

Roxana. (2019). Domestic Violence. Retrieved (2019.10.5). from:http;//w.w.w. medicinenet.com

Sarah. (2006). Alcohol & Domestic Violence. Retrieved (2019.10.4)From;http;//w.w.w.onlinesagepug.com

Unicef. (2000). Domestic Violence. Retrieved (2019.10.4) From ; http;// w.w.w. unicef.com

Unicef. (2006). Behind the Closed Door. Retrieved (2019.10.4) From ; http;// w.w.w. unicef.com

UN Women, (2019). Ending Violence Against Women. Retrieved (2019.10.5). from: http;// w.w.w. unwomen.org

Vathsala, J., Kumuda, W. & Pia Axemo. (2001). Intimate Partner Violence Against Women In Capital Province of Sri Lanka; Risk Factors And Help Seeking. Retrieved (2019.10.6) From ; http;//w.w.w.researchgate.net/publication

WHO. (2017). Violence Against Women. Retrieved (2019.10.6) From ; http;// w.w.w.who.int

Zainab Alwani, (2016). Domestic Violence; Islamic Prespective. Retrieved (2019.10.6)From; http;//w.w.w.researchgate.net/publication

அக்ரம், எம். (2011). *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்.* (2ம் பதிப்பகம்). கொழும்பு: இஸ்லாமிய புத்தக நிலையம்.

அமீன், எம். ஐ. எம். (1998). இலங்கை முஸ்லிம்களிடையே இடம் பெறும் விவாகரத்துக்கான காரணங்களும் விவாகரத்துக்களின் விளைவுகளும். *இஸ்லாமிய சிந்தனை.* பேருவலை: நளீமிய்யா வெளியகம்.

அஸ்மத், எம். ஐ. (2003). ஆவள் உணவு ஆடை. *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமாத். அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா

இஸ்மாயீல், (2014) ஏ. எச். *இல்லறச் சோலையில் கணவன்- மனைவி.* சென்னை, புஸ்ரா ஏஜன்சி.

கலையரசன், கா. (2003). *திருமண பந்தத்தில் கணவன்- மனைவி*. இறக்காமம், மறுமலர்ச்சி.

கமலினி, க. (2011). பால்நிலைக் கருத்தியலும் பெண்களுக்கெதிரான வன்முறையும். *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

சுஹீரா, எஸ். (2016). *அடிப்படை சமுகவியல் எண்ணக்கரு.* (2ம் பதிப்பு). அக்கறைப்பற்று: Socio Political Study Circle.

பத்மநேசன். (2002). பெண்களுக்கெதிரான வன்முறை. *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

பெண்கள் வாரியம், (2019). பெண்கள் பாதுகாப்பு மற்றும் ஆதரவு. Retrived (2019.10.10) from http;//w.w.w. 211tpronto.ca.topic.

பௌசுல், எம். பி. (2015). பெண்களை வழிப்படுத்த ஆணாதிக்கத்தை தவிர்த்து அறிவுரைப் பகருங்கள். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமாத் அன்ஸாரி சுன்னதுல் ஹம்மதிய்யா.

மஸாஹிர், எஸ்.எம்.எம். & இஸ்மியா பேகம், எம்.எஸ். (2017). *இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடுகளும்.* கொழும்பு: அல்ஹத.்.ப் பதிப்பகம்.

முஸ்தபா, எம். ஆர். எம். (2005). *முஸ்லிம் பெண்களுக்கு.* சென்னை: யுனிவர்ஸ் பப்ளிகேசன்

றியால், ஏ.எல்.எம். (2014, டிசம்பர்). பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை: விளக்கமும்மீளாய்வும். *Journal of Social Review*. Retrieved (2019.10.4) From;http;//w.w.w.seu.ac.lk

நுஸ்லா, எல். (2013, செப்டம்பர்). காழிக்கோட்டில் முறிந்துப் போகும் குடும்ப உறவுகள். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமாத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா

ஜமாலுத்தீன், அ. (2001). *இஸ்லாத்தில் குடும்ப இயல்.* சென்னை: புர்கான் பதிப்பகம்

லதீப், எம்.எம்.ஏ. (2009). *விவாகம்.* (1ம் பதிப்பு). அக்கரைப்பற்று: ஜின்னாப்பதிப்பகம்

ஹில்பான், எம்.எல்.எம். & ஜெஸீல், எம்.ஐ.எம். (2018). முஸ்லிம் குடும்பங்களில் நிலவும்உள்ளக பிரச்சினைகள்: மட்டக்களப்பு தேர்தல் தொகுதியை மையப்படுத்திய கள ஆய்வு. *Srilanken Journal of Arabic and Islamic Studies*, Retrieved (2019.10.4) From http; //w.w.w. seu. ac.lk

தினகரன் (2018, ஒக்டோபர் 7). வன்முறை என்பது வெறும் உடல் தாக்கமல்ல. Retrived (2019.10.5) from தினகரன் : http;//w.w.w.varamanjari.lk

மன்சூர் அலி, (2014.6.3). சுன்னத்தான இல்லறம். Retrieved (2019.10.6) From http; //w.w.w. sunnathillaram.blogspot.com

மாஜிதா. (2002). இலங்கையில் வீட்டு வன்முறைச் சட்டம். *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

ரமீஸ், ஆர். (2016, ஒக்டோபர் 13). பூட்டப்பட்ட கதவுகளுக்குள்ளே: இலங்கையில் வீட்டு வன்முறை. Retrived (2019.10.5) from : http;//w.w.w.roar.media.com

ராதிகா. (2001). பெண்கள் வன்முறைக்க உற்படாத சமூகம். *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

ரியால், எம். (2012.2.18). நவீன இஸ்லாமிய குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள். Retrieved (2019.10.4) frrom;http;//w.w.w.kalvivali. blogspot. com

ஜெபர், ஏ. (2010.5.2). முஸ்லிம் குடும்பம். Retrived (2019.10.6) from http;//w.w.w.islsmkural